# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 91 / 2023**

திரு தி. முருகரத்தனம்,
எண்.122, எலிசியம் பிளஷிங் மேடோவ்ஸ்,
குளோபஸ் கார்டன்ஸ், கே. கே. பாளையம்,
கோவை – 62. ........மேல்முறையீட்டாளர்
(திரு தி. முருகரத்தனம் & திருமதி மீனாட்சி பாரதி)

எதிர்

செயற்பொறியாளர்/பகிர்மானம்/உசிலம்பட்டி,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS Complex, உசிலம்பட்டி – 625 532.
. . . எதிர்மனுதாரர்
(திரு G. வெங்கடேஷ்வரன், செயற்பொறியாளர்/பகிர்மானம்/உசிலம்பட்டி)

**மனு பெறப்பட்ட நாள்: 15-12-2023**

**கேட்புரை நாள்: 14-02-2024**

**ஆணை நாள்: 20-02-2024**

15.12.2023 அன்று பெறப்பட்ட திரு தி.முருகரத்தனம், எண்.122, எலிசியம் பிளஷிங் மேடோவ்ஸ், குளோபஸ் கார்டன்ஸ், கே. கே. பாளையம், கோவை – 62 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 91/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 14.02.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையின் மூலம் பெறப்பட்ட வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனக்கு தெரியாமல் மோசடியாக தனது பெயரில் வீதப்பட்டி மாற்றம் கோரி அளிக்கப்பட்ட விண்ணப்பம் குறித்து மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது மின் இணைப்பு எண் 175-003-05-இல் தனக்கு தெரியாமல் மோசடியாக தனது பெயரில் வீதப்பட்டி மாற்றம் கோரி வீதப்பட்டி மாற்றம் செய்ததாக மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பானது வீட்டுப் பயன்பாடு உபயோகப்படுத்துவதற்கு மாறாக வணிக பயன்பாடு உபயோகப்படுத்தப்பட்டு வந்ததை அமலாக்கப்பிரிவு அவர்களால் கண்டறியப்பட்டு அபராத தொகை வசூல் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் மதுரை மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மதுரை மின் பகிர்மான வட்டம் 19.10.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு :**

3.1 மதுரை மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 19.10.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *மின் இணைப்பு எண்: 175-003-50 அமலாக்கப் பிரிவினால் கள ஆய்வு செய்யப்பட்டு முறைகேடான உபயோகத்திற்கு அபராதத் தொகை வசூல் செய்யப்பட்டுவிட்டது. மின் இணைப்பின் வீதப்பட்டி வேறு எவரின்*

*விண்ணப்பத்தின் பேர் மாற்றம் செய்யப்படவில்லை என்று எதிர்மனுதாரர் மன்றத்தில் தெரிவித்ததை மன்றம் ஏற்றுக்கொண்டு மனு முடித்து வைக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 14.02.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு தி. முருகரத்தனம் மற்றும் திருமதி மீனாட்சி பாரதி ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர் திரு G. வெங்கடேஷ்வரன், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ உசிலம்பட்டி, மதுரை மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் 2/15 கல்வி நகர் மூன்றாவது தெற்குத் தெரு, மதுரை 625021 இல் உள்ள 0517500350 எண் மின்னிணைப்பு தன் பெயரில் உள்ளதாகவும் 2022 டிசம்பர் 13 மற்றும் 17 ஆகிய 2 நாட்களில் மின்வாரியத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த paavai@hotmail.com மின்னஞ்சலுக்கு 'தங்கள் விண்ணப்பம் பதிவதற்கான OTPக்கள் வந்ததாகவும், தான் ஏதம் விண்ணப்பம் செய்யாததால்

21.12.2022 அன்று தமிழ்நாடு மின்வாரியத்திற்கு தன்னுடைய மின்வாரிய இணையதளக் கணக்கில் வேறு யாரோ சட்டவிரோதமாக உள்ளே நுழைந்துள்ளதாகத் தெரிவித்ததாகவும், மின்வாரிய மின்னஞ்சல் முகவரிகள் Seenftmdu@tnebnet.org, ig@tnebnet.org மற்றும் eeiw@tnebnet.org க்கு புகார் அனுப்பியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேலும் 29.12.22 அன்று தன் மனைவி திருமதி மீனாட்சியை ஆழ்வார் நகர் மின்வாரிய அலுவலகத்திற்கு அனுப்பி இந்த OTPக்கள் என்ன என்று கேட்டதாகவும், அதைப் பற்றித் தனக்குத் தெரியாது என்று அவர்கள் கூறியதால் தன் தொலைபேசி எண் 8870717572 தவிர எந்த எண்ணுக்கும் மின்வாரியத்திடம் இருந்து செய்திகள் போக அனுமதிக்க வேண்டாம் என்று ஒரு கடிதத்தைக் கொடுத்துக் கையெழுத்துப் பெற்றுக்கொண்டதாகவும், இந்த அளவுக்கு தான் முன்னெச்சரிக்கையோடு செயல்பட்டும் கூட 31.12.2022 அன்று தன்னுடைய மின் இணைப்பு எண் 0517500350 வணிகப் பயன்பாட்டு விகிதத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் அதற்கான தொகையைக் கட்டுமாறும் மின்வாரியத்திடமிருந்து மின்னஞ்சல் வந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மின்வாரிய இணையதளத்திற்குச் சென்று பார்த்தபோது விண்ணப்பத்தில் விண்ணப்பதாரர் பெயர் தன்னுடையதாகவும் 31.12.22 அன்று விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதாகவும் அன்றே ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, site inspection சென்றதாக குறிப்பிட்டிருந்ததாகவும், அந்த மின்னஞ்சலை தான் பெற்ற அதே நாளில் மின்வாரியம் விதித்த தொகையை யாரோ ஒருவர் தன்னுடைய பாரத ஸ்டேட் வங்கிக் கணக்கில் இருந்து இணையதளம் மூலமாகக் கட்டியிருப்பதும் தெரிய வந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 உடனடியாக தான் நாகமலை ஆழ்வார் நகர் உதவி மின் பொறியாளரிடம் அவர்கள் கட்டண விகித மாற்றம் பற்றி எதுவும் விண்ணப்பிக்கவில்லை என்றும் தன்னுடைய மின் இணைப்பு எண் தொடர்பாக ஏதோ சட்டவிரோதமான நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது என்றும் paavai@hotmailஇல் இருந்து mdu175ae@tnebnetக்கு மின்னஞ்சல் அனுப்பியதாகவும், தன்னுடைய மின்னஞ்சல்களுக்குப் பதில் ஏதும் வராததால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வழி கட்டண விகித மாற்றத்திற்கு

விண்ணப்பித்தது யார் என்றும் அதற்கான கட்டணத்தைக் கட்டி இருப்பது யார் என்றும் கேட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 அதற்கு மின்வாரியத்திடம் இருந்து வந்த பதிலில் டிசம்பர் 7ஆம் தேதி அந்த மின்னிணைப்பு இருந்த இடத்தில் மின்வாரிய அமலாக்கப் பிரிவின் கள ஆய்வு நடந்ததாகவும், அதன் அடிப்படையில் வீட்டு உபயோகத்திற்கான மின் இணைப்பில் இருந்து மின்சாரம் கேபிள் டிவிக்காகத் தவறாகப் பயன்படுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதற்காக அபராதம் விதிக்கப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டதாகவும், அந்த அபராதத்தைக் திரு பாக்கியராஜ் கட்டினார் என்று கூறப்பட்டிருந்ததாகவும், ஆனால் யார் விண்ணப்பம் செய்தார்கள் என்ற கேள்விக்குப் பதில் தராமல், கட்டண விகிதம் மாற்றப்பட்டது என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 யார் விண்ணப்பத்தை இணையத்தில் துவங்கினார்கள் என்ற கேள்விக்குப் பதில் வராததால் தன் பெயரையும் தன்னுடைய ஆதார் அட்டையையும் முறையற்ற வழியில் பயன்படுத்தி மின்வாரியத்தை ஏமாற்றிக் கட்டண விகித மாற்றம் செய்தவரைக் காவல்துறையின் துணையுடன் இணையதளக் குற்றமாக விசாரிக்க வேண்டும் என்று முதல்வரின் முகவரிக்கு ஒரு புகார் அனுப்பப்பட்டதாகவும், அப்பொழுதுதான் மின்வாரிய உதவிப் பொறியாளரிடம் இருந்து வேறொரு பதில் வந்ததாகவும் அதில் கட்டண விகித மாற்றத்தை மின்வாரியமே செய்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், அத்துடன் திரு பாக்கியராஜ் என்பவர் நுகர்வோர் பொறுப்பாளர் என்று கையெழுத்திட்டிருந்த கடிதம் இணைக்கப்பட்டிருத்ததாகவும், திரு பாக்கியராஜ் அந்த மின்னிணைப்பின் நுகர்வோரோ பொறுப்பாளரோ இல்லை என்று உறுதியாகச் சொல்வதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 உதவிப் பொறியாளர் கடிதத்தின்படி அனைத்து மாற்றங்களும் நடவடிக்கைகளும் அலுவலக ரீதியாகவே நடந்துள்ளது என்றால் "your application" என்று குறிப்பிட்டு தன் பெயர் இடம் பெறக் காரணம் என்ன? அமலாக்கப் பிரிவு உதவிப் பொறியாளரின் அறிவுறுத்தலின் படி தான் மாற்றம் நடந்தது என்றால், விண்ணப்பம், document verification site visitக்குத் தேவை என்ன? அமலாக்கத்துறை அதிகாரி பிறப்பித்த (அறிவுரை) உத்தரவின் எழுத்து வடிவ நகல் ஏன் அனுப்பப்படவில்லை? என்று மேல்முறையீட்டாளர்

வினவியுள்ளார். மேலும், 17.12.22 அன்று தான் விண்ணப்பம் செய்யப்பட்டது என்றால், 13.12.22 அன்று வந்த OTP யின் முகாந்திர விண்ணப்பம் என்ன? வீட்டு மின் இணைப்பு வணிகப் பயன்பாட்டுக்குப் பயன்படுத்தப்படுவதைக் கண்டுபிடிக்கின்ற ஒவ்வொரு முறையும் மின் இணைப்பாளரின் அனுமதி பெறாமல் அவர் எதுவும் வேண்டுகோள் விடுக்காமல் அவரிடம் விண்ணப்பம் எதுவும் பெறாமல் மின்வாரியம் தானாகவே வணிகப் பயன்பாட்டுக் கட்டண விகிதத்திற்கு அந்த மின் இணைப்பை மாற்றி விடுகிறதா என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் வழங்கிய தீர்ப்பு ஏற்புடையதாக இல்லை என்றும் தன் குறை கட்டண விகித மாற்றத்தைப் பற்றியது இல்லை OTPக்கள் வந்தால் உரிமையாளர் அதைப் புறக்கணித்துச் சும்மா இருக்கவேண்டும் என்றால் OTPக்களுக்கு அவசியம் என்ன? எப்பொழுது AE பயன்படுத்துகிறார். எப்பொழுது சட்டவிரோதமாக ஏமாற்றுபவர் பயன்படுத்துகிறார்கள் என்று எப்படி தங்களுக்குத் தெரியும்? எனவும், தமிழ்நாடு மின்குறைதீர்ப்பாளர் அமலாக்கப் பிரிவு கள ஆய்வின் போது தவறாகப் பயன்படுத்தப்படும் அனைத்து இணைப்புக்களுக்கும் எழுத்து வடிவில் AEக்கு ஆணை பிறப்பிக்கிறது என்றும் அவை அனைத்தையும் AEயே மாற்றுவார்கள் என்றும் அப்பொழுது உரிமையாளருக்கு OTPக்கள் அனுப்பப்படும் என்றும் ஆனால் அந்த OTPக்கள் தேவைப்படாமலேயே AE இணையக் கணக்கில் உள்நுழைந்து உரிமையாளரின் ஆதாரைப் பதிவேற்றம் செய்து சுய அறிவிப்பில் கையெழுத்திடுவார்கள் என்றும் அதன் பிறகு பல நாட்கள் கழித்து விண்ணப்பம் பரிசீலனை மற்றும் சைட் விசிட் (site visit)' செய்துதான் ஏற்கப்படும் எனவும் மேல்முறையீட்டாளர் வினவியுள்ளார்.

5.9 தான் தன் மின்னிணைப்பை மாற்றியதைக் குறை கூறவில்லை திரு பாக்கியராஜ் தங்கள் அனுமதி இன்றி இணைப்பைத் தவறாக பயன்படுத்தியிருக்கிறார் ஆனால் வழக்கத்துக்கு மாறாக தங்கள் இணைப்பிற்கு மட்டும் மாற்றுவதற்கு அறிவுறுத்தி வழக்கத்துக்கு மாறாக உரிமையாளர் இன்றி மின்வாரியமே மாற்றியதா அது ஏன் எனவும், நில அபகரிப்பு நோக்கத்தில் திட்டமிட்டுச் செயல்படுகின்ற தங்கள் வீட்டில் வேலை பார்த்த திருமதி மணியம்மாளின் குடும்பம் கேபிள் டிவி தொழிலை அங்கேயே தொடர்ந்து, நடத்துவதற்காக மின் இணைப்பு உரிமையாளரின் அனுமதி பெறாமலே செய்த விண்ணப்பமோ என்ற ஐயம் தங்களுக்கு இருப்பதால்தான் இந்த அளவிற்கு தாங்கள்

கட்டண மாற்ற விகிதம் பற்றிய விவரங்கள் புகார் கொடுத்து விசாரிப்பதாகவும், மின்வாரியத்திற்கு தனது நுகர்வோரின் இணைய கணக்கில் நுழைந்து, அவராக பாவித்து விண்ணப்பம் செய்து நுகர்வோரின் பெயரிலுள்ள ஆவணங்களை பதிவேற்றம் செய்ய சட்டபூர்வமாக அனுமதி உண்டா என்று விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.10 மின் இணைப்பின் உரிமையாளரின் அனுமதி இன்றி ஆழ்வார் நகர் பிரிவு, ஆதார் நகலையும், சுய அறிவிப்பு படிவத்தையும் பயன்படுத்தி இருப்பதாகவும், அது சட்டப்படி குற்றம்தானா இல்லையா என்று தீர்ப்பில் குறிப்பிடும்படியும், மின்வாரியம் கட்டண விகிதத்தை தானே அமலாக்கப்பிரிவின் அறிவுறுத்தலின் பெயரில் மாற்றியதாக கூறினாலும், அதில் இருந்த பல முரண்பாடுகள் ஒன்றுக்கு கூட குறை தீர்க்கும் மன்றம் விளக்கம் அளிக்க தவறியதால், அனைத்து முரண்பாடுகளையும் தீர்க்கும் வண்ணம் ஆதாரம் கொடுக்கும்படியும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 17.12.22 அன்று தான் விண்ணப்பம் ஏற்கப்பட்டது என்றால், 13.12.22 அன்று வந்த OTPயின் முதாந்திர விண்ணப்பம் என்ன எனவும், கட்டண விகித மாற்றத்தை மின்வாரியமே செய்யும்பொழுதும், OTPக்கள் மின்நுகர்வோருக்கு அனுப்பப்படும். அந்த OTPக்கள் தேவைப்படாமலேயே மின்வாரிய அதிகாரி விண்ணப்பத்தை பூர்த்தி செய்யமுடியும் என்ற வாதத்தை, உண்மை என்று மின்வாரிய IT பிரிவு அறிக்கை குடுக்க முடியுமா எனவும், மின்வாரியமே மாற்றும்பொழுது, விண்ணப்பத்தில் உரிமையாளரின் எண் இன்றி இடம்பெற்ற 7639991006 எண் எங்கிருந்து வந்தது அது மின்வாரிய பதிவேட்டில் இருந்தது என்றால், எப்பொழுது பதிவானது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 வீட்டுக்காக கொடுக்கப்பட்ட இணைப்பை வணிகத்துக்காக பயன்படுத்துவதாக கண்டறியப்பட்ட அணைத்து 100 சதவீத இணைப்புகளுக்கும், அமலாக்கப் பிரிவு கட்டண விகிதத்தை மாற்றுமாறு 'அறிவுரை' கொடுக்குமா? இல்லை என்றால் எதன் அடிப்படையில், தங்கள் இணைப்பு மட்டும் மாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டது? அந்த அறிவுரை/ஆணை நகல் வேண்டியும், இந்த அனைத்து கேள்விகளுக்கும் பதிலளித்து, ஆதார் பயன்படுத்தி, சுய அறிவிப்பு படிவத்தில், உரிமையாளர் போல பாவித்து, பதிவேற்றம்

செய்தது சரியா என்று பரிசீலனை செய்து தீர்ப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 05–175–003–50 என்ற மின்இணைப்பு எண்ணிற்கு 2022 டிசம்பர் 13 மற்றும் 17 ஆகிய தேதிகளில் எந்த விண்ணப்பமும் பெறப்படவில்லை என்றும் ஆழ்வார்நகர் பிரிவு மின்வாரிய அலுவலகத்தில் இருந்து மேற்கண்ட மின்இணைப்பு உரிமையாளருக்கு எந்த OTPயும் அனுப்பப்படவில்லை என்றும், மின்வாரிய அலுவலகங்களில் இணையதளம் மூலமாகவே விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதாகவும், விண்ணப்பதாரர் இணையதளத்தில் விண்ணப்பிக்கும் கைபேசி எண்ணிற்கே OTP சென்றடையும் என்றும் யாருடைய கைபேசி எண்ணில் இருந்து விண்ணப்பிக்கப்படுகிறது என்று விண்ணப்பம் சமர்ப்பிப்பவருக்கே தெரியும் ஆகையால் ஆழ்வார்நகர் பிரிவு மின்வாரிய அலுவலகத்தில் இருந்து மேற்கண்ட மின்இணைப்பு உரிமையாளருக்கு எந்த OTP எண்ணும் அனுப்பப்படவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 திருமதி மீனாட்சி அவர்கள் 8870717572 என்ற கைபேசி எண்ணிற்கே எந்த அலுவலக தகவலும் பரிமாற்றம் செய்யப்படவேண்டும் என்று ஆழ்வார்நகர் பிரிவு அலுவலகத்தில் கடிதம் அளித்ததால் அலுவலக பதிவேட்டில் கைபேசி எண் சரிபார்க்கப்பட்டு, உறுதி அளிக்கப்பட்டதாகவும், வீட்டு மின்இணைப்பு எண் 175–003–50–ஐ 07.12.2022 அன்று அமலாக்கப்பிரிவு, உதவி செயற்பொறியாளர் அவர்கள் களஆய்வு செய்தபோது வீட்டு மின்இணைப்பானது வணிக பயன்பாட்டில் உள்ளது என உறுதி செய்யப்பட்டு, அதற்கான இழப்பீட்டு தொகை ரூ.13,160/–ம் வசூல் செய்யப்பட்டதாகவும், மேலும் அமலாக்கப்பிரிவினரால் விகிதப்படி மாற்றம் செய்ய உத்தரவு இடப்பட்டிருந்ததாகவும், அதன்பேரில் 175–003–50 என்ற மின்இணைப்புக்கு விகிதப்பட்டியல் மாற்றுவதற்கான விண்ணப்பம் இணையதளம் வாயிலாக பெறப்பட்டதால் மேற்கண்ட மின்இணைப்பு வணிக பயன்பாட்டு விகிதப்பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 07.12.2022 அன்று அமலாக்கப் பிரிவினரால் மின் இணைப்பு எண். 175-003-50 கள ஆய்வு செய்யப்பட்டு, வணிகப் பயன்பாடு கண்டறியப்பட்டு, அதற்கான அபராதத்தொகையும் வசூல் செய்யப்பட்டதாகவும், மேலும் ஆய்வின்போது உடனிருந்த திரு.பாக்கியராஜ், த/பெ சின்னதம்பி (பொறுப்பாளர்) அவர்களுக்கு அமலாக்கப்பிரிவினரால் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டதாகவும், இந்நிலையில் 3.12.2022 அன்று 175-003-50 என்ற மின்னிணைப்பிற்கு விகிதப்படி மாற்றம் செய்வதற்கான Online விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததால் விகிதப்படி மாற்றம் செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மின்வாரிய அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் Verification, Inspection, Service connection, Sanctioned ஆகிய பலவிதக் கட்டங்களாக நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், அதன்படியே இவ்விண்ணப்பத்தின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் மனுதாரர் தகவல்கள் கோரியதன் அடிப்படையில் அமலாக்கத்துறை அதிகாரி அவர்கள், களஆய்வு செய்து உத்தரவு பிறப்பித்த பார்வை நகல் மனுதாரருக்கு வழங்கப்பட்டதாகவும், அலுவலக பதிவேட்டின்படி 13.12.2022 அன்று மின்இணைப்பு எண் 175-003-50-க்கு எந்தவொரு online விண்ணப்பமும் பெறப்படவில்லை எனவும், மின்வாரிய அலுவலகத்திலிருந்து OTP எதுவும் அனுப்பப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 வீட்டு மின்இணைப்பில் தவறான உபயோகம் செய்யப்படுவது கண்டறியப்பட்டால் இந்திய மின்சார சட்டம் 2003 பிரிவு 126-ன் படி தவறானது மற்றும் அபராதத்திற்கு உரியதாகும் என்றும் ஒருமுறை களஆய்வில் உறுதி செய்யப்பட்டால் அம்மின்இணைப்பு அபராதத்தொகை விதிக்கப்பட்டு, மேலும் தொடர்ந்து அவர் அந்த மின்இணைப்பை உபயோகப்படுத்துவதற்கு விகிதப்படி மாற்றம் செய்ய பரிந்துரை செய்யப்படுவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 தவறாக பயன்படுத்தப்படும் மின் இணைப்புகள் விகிதப்படி மாற்றம் செய்யப்படுகின்றன எனவும், தொலைபேசி எண்: 7639991006 ஆனது online விண்ணப்பத்தில் பதிவாகியுள்ள தொலைபேசி எண்ணாகும் எனவும், இணையதளம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு விண்ணப்பதாரர் அளித்துள்ள ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, அதனடிப்படையில் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கைகள்

எடுக்கப்படுகின்றன எனவும், மின் வாரியம் தானாக எந்த ஆவணங்களையும் online விண்ணப்பங்களில் பதிவேற்றம் செய்வதில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மின் வாரிய அலுவலகத்தில் இருந்து OTP–க்கள் எதுவும் அனுப்பப்படுவது இல்லை, நுகர்வோர் புதிய விண்ணப்பங்களை இணையதளம் மூலமாக சமர்ப்பிக்கும்போது அவருடைய கைபேசிக்கு OTP அனுப்பப்படுகின்றன எனவும், மேலும் பதிவாகியுள்ள விண்ணப்பங்களின் மீது பிரிவு அலுவலர் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் விண்ணப்பதாரர் பதிவு செய்துள்ள கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியாகவும், மின் அஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சலாகவும் செய்திகள் அனுப்பப்படுகின்றன. பிரிவு அலுவலர் நுகர்வோரின் பதிவேட்டில் உள்நுழைந்து எந்த ஒரு ஆவணங்களையும் பதிவேற்றம் செய்ய இயலாது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மின் வாரிய அதிகாரிக்கு நுகர்வோர் இணையதள கணக்கில் உள் நுழைந்து நுகர்வோராக பாவித்து விண்ணப்பம் செய்து நுகர்வோரின் பெயரில் உள்ள ஆவணங்களை பதிவேற்றம் செய்ய முடியாது எனவும், அதற்கான இணையதள விதிமுறை இல்லை எனவும், அதனால் அவரால் தன்னிச்சையாக நுகர்வோர் கணக்கில் சென்று நுகர்வோருடைய விண்ணப்பத்தில் அனுமதி இல்லாமல் மாற்றங்கள் செய்ய இயலாது எனவும், மின் வாரியம் எந்த ஒரு தனிநபர் தூண்டுதலின் பெயரிலோ தனிநபருக்காகவோ விகிதப்படி மாற்றம் செய்வது இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேற்கூறிய வாத பிரதிவாதங்களில் மேல்முறையீட்டாளர் தனக்கு தெரியாமல் தன்னுடைய விகிதபட்டி IA to V–க்கு மாற்றப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு வழங்கிய மின் இணைப்பு விகிதபடி IA–இன்படி பயன்பாடு இல்லாமல் cable TV operation பயன்பாட்டில் இருந்ததால் அமலாக்ககுழு ஆய்வின் அடிப்படையில் அதிகாரமற்ற மின்சார பயன்பாடு (Mis use of

Tariff)–இன் கண்டுப்பிடிப்பின் அடிப்படையில் மின்சார சட்டம் 126–இன்படி அமலாக்க துறையின் கண்டுபிடிப்பின்படி விகிதப்படி IA லிருந்து V ற்கான மாற்றி அப்போது அவ்வளாகத்தில் பொருப்பாளராக இருந்த திரு பாக்கியராஜுக்கு தெரிந்த நிலையில் அபராத தொகையும் உரிய விகிதப்பட்டி மாற்றமும் நடைபெற்றதாக தெரிவித்தார்.

7.4 இவ்வழக்கில் அதிகாரமற்ற மின்சார பயன்பாடு காரணமாக மின்சார சட்டம் 126–இன்படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளதால், இவ்வழக்கு சம்பந்தமாக தீர்வு காண மின்குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைத்தீர்ப்பாளருக்கு அதிகார வரம்புள்ளதா என அறிய சம்பந்தப்பட்ட தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகள் 2004, விதி 5 ஆராயப்படுகிறது. அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"The forum shall take up any kind of grievances/complaints as defined in clause 2 (f) of these Regulations. However, the consumer's grievances concerned with*

*(i) unauthorized use of electricity as detailed u/s 126 and*

*(ii) offences and penalties as detailed u/s 135 to 141 of the Electricity Act, 2003 are excluded from the purview of this forum."*

7.5 மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, மின்சாரச் சட்டம் பிரிவு 126இல் விவரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்படாத முறையில் மின்சாரம் உபயோகித்தல் மற்றும் பிரிவு 135 முதல் 141 வரை விவரிக்கப்பட்டுள்ள குற்றங்கள் மற்றும் அபராதங்கள் சம்பந்தப்பட்ட குறைகளும் முறையீடுகளும் மன்றத்தின் வரம்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

7.6 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு எண் 175–003–50 ஆனது (cable TV operation) வணிக பயன்பாடு உபயோகப்படுத்துவதற்கு பயன்பட்டதாக அமலாக்கப்பிரிவு குழுவினரால் மின்சாரச்சட்டம் 126–ன்படி அபராத தொகை வசூலிக்கப்பட்டு அதன் தொடர் நடவடிக்கையாக மின்கட்டண வீதப்பட்டி மாற்றப்பட்டுள்ளது என தெரிய வருவதால் மேற்கண்ட முறையீடு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகள் 2004 –ன்படி மன்றத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்டது என்பதால், மேற்கண்ட மனுவின்மீது மீன்குறைதீர்ப்பாளர் தீர்வு எதுவும் வழங்க அதிகார வரம்பில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 இந்த மேல்முறையீட்டு மனுவிலுள்ள நுதல் பொருளானது உரிமம்தாரரால் மின்சார சட்டம் 2003இன்படி பிரிவு 126இன் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை என தெரிய வருவதால் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார

குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 5–இன்படி மன்றத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்டது. எனவே, இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு எதுவும் வழங்க அதிகார வரம்பில்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 91/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு தி. முருகரத்தனம், – By RPAD
எண்.122, எலிசியம் பிளஷிங் மேடோவ்ஸ்,
குளோபஸ் கார்டன்ஸ், கே. கே. பாளையம், கோவை – 62.

2. செயற்பொறியாளர்/பகிர்மானம்/உசிலம்பட்டி,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS Complex, உசிலம்பட்டி – 625 532.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ரேஸ் கோர்ஸ் ரோடு, K, புதூர், மதுரை – 625 007.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By Email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.